வரிசை கட்டி நிற்கும் பல நிறுவனங்கள் - புதிய தொழில் முதலீடுகள்!

# இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத்திற்கு வரும்!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!

சென்னை, மே 24 -

தொழில் தொடங்க வரிசை கட்டி நிற்கும் பல நிறுவனங்கள், புதிய தொழில் முதலீடுகளால் இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத்திற்கு வந்துவிடும் என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.


தலையங்கம்
தினத்தந்தி
23.5.2023 (செவ்வாய்க்கிழமை)
துள்ளி வருகுது தொழில் முதலீடுகள்


இது குறித்து 23.5.2023 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கடந்த 2 ஆண்டுகால ஆட்சி, 'தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பொற்காலம்' என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில், ஒவ்வொரு மாதமும் ஏராளமான தொழில்முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளன. இந்த 2 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ரூ.2.95 லட்சம் கோடி அளவில் முதலீடுகள் செய்வதற்காக 226 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தி டப்பட்டுள்ளன. இவையெல்லாம் செயலுக்கு வரும்போது 4 லட்சத்து 12 ஆயிரத்து 565 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

எங்களை நீங்கள் தொழில் முதலீட்டுக்காக தேடிவர வேண்டும் என்று இல்லாமல், நாங்கள் உங்களைத் தேடி வருகிறோம் என்று கூறும் அளவுக்கு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், தொழில் அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு, தொழில்துறை கூடுதல் தலைமை செயலாளர் எஸ். கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குனராக முன்பு இருந்த பூஜா குல்கர்னி, இப்போது அந்த பதவியில் இருக்கும் விஷ்ணு ஆகியோர் பல நாடுகளுக்கு சென்றதால் புதிய தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

பலதரப்பட்ட உற்பத்தி தொழில் நிறுவனங்களை கணக்கிட்டால் ஆசியாவின் 'டெட்ராய்டு' தமிழ்நாடு என்றே அழைக்கக்கூடிய அளவில் இருக்கிறது. அந்தஅளவில் சர்வதேச கனரக தொழில்நிறுவனங்கள், மினி தொழிற்பூங்காக்கள் முதல் ஏராளமான குறு, சிறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் பரவலாக தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த மோட்டார் உதிரிபாகங்களில் 35 சதவீதம் தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. கார் உள்பட மோட்டார் வாகன உற்பத்தியில் பல புகழ்பெற்ற சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் மின்னணு தொழில்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காலணி குறிப்பாக தோல் அல்லாத காலணி உற்பத்தியிலும் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் மிக அதிகமாக தமிழ்நாட்டில் தொழில்முனைவோர்களாகியிருக்கிறார்கள். அதுபோல பெண்கள் தொழில் தொடங்குவதற்கும், சென்னையை சுற்றிலும் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் பரவலாக தொழில்வளர்ச்சி அடைய சிறப்பு ஊக்கமும் வழங்கப்படுகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில், தொழில் தொடங்குபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அரசால் வழங்கப்படுகின்றன.

கடந்த மார்ச் மாதம் நடந்த அமைச்சரவை கூட்டத்தில், ரூ.40 ஆயிரம் கோடி முதலீடுகளுக்கான 6 தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 2ந்தேதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில், தூத்துக்குடியில், மலேசியா நாட்டை சேர்ந்த பெட்ரோனாஸ் நிறுவனத்தால் ரூ.34 ஆயிரம் கோடி செலவில் அமையவிருக்கும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி தொழில் உள்பட மேலும் சில தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் பெருவாயலில் ரூ.1,891 கோடி செலவில் அமைய இருக்கும் 'மிட்சுபிஷி' நிறுவனத்துக்கு அடிக்கல் நாட்டிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஹூண்டாய் நிறுவனத்தின் மின்சார வாகன உற்பத்தி தொடங்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதுதவிர ராயல் என்பீல்டு நிறுவனம், சிஸ்கோ என பல நிறுவனங்கள் வரிசைகட்டி தமிழ்நாட்டில் தொழில் தொடங்க இருக்கின்றன. மேலும் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்று முதல்அமைச்சர் அங்கும் தொழில்முனைவோரை சந்தித்து தமிழ்நாட்டுக்கு அழைப்பு விடுக்கிறார். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும், தொழில் முத லீடுகள் யாவையும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று தமிழ்நாடு அவரை வாழ்த்துகிறது. இதே வேகத்தில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இருந்தால் இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் முதல் இடத்துக்கு தமிழ்நாடு வந்துவிடும் என்பதில் சந்தேகமேயில்லை.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



மன்னர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் 1348 வது சதய விழாவை முன்னிட்டு ஒத்தக்கடையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் தலைமையில், தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவி.வீ.மெய்யநாதன் முன்னிலையில், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, காடுவெட்டி தியாகராஜன் , சௌந்தரபாண்டியன் மற்றும் மாநகர மேயர் அன்பழகன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன் ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், கருணை ராஜா பகுதி செயலாளர்கள் போட்டோ கமால், மோகன்தாஸ், ராம்குமார் மற்றும் குமரவேல் ராஜேந்திரன், அம்பிகாவதி கை குடி சாமி உள்ளிட்ட கோட்ட தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

கே. இராஜேந்திரன் தலைமையில்

# பண்ருட்டி நகரில் தெருமுனைக் கூட்டம்!

## கரூர் முரளி சிறப்புரை!

கடலூர்,மே 24 -

பண்ருட்டி நகர தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சியில் இரண்டு ஆண்டுகளே சாட்சி சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் ஆலோசனைப்படி 22.5.2023 அன்று மாலை 6 மணியளவில் பண்ருட்டி தட்டாஞ்சாவடி பேருந்து நிறுத்தம் அருகிலும் மற்றும் பண்ருட்டி பேருந்து நிலையம் விஜயா தியேட்டர் அருகில் பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் .க. இராஜேந்திரன் தலைமையில் நகர இளைஞரணி அமைப்பாளர் சம்பத் வரவேற்புரையாற்ற கூட்டம் நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் கரூர் முரளி கலந்துகொண்டு சிறப்புரை யாற்றி னார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆர். எஸ்.எம்.தணிகை செல்வம். மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஜி. கதிர்காமன். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் நா. தென்னரசு. நகர மன்ற துணை தலைவர் ஏ.சிவா, நகர அவை தலைவர் ராஜா.

நகர பொருளாளர் ராமலிங்கம். நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன். நகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பரணிசந்தர். முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி. முன்னாள் அவைத் தலைவர் சின்னதம்பி. முன்னாள் மாவட்ட மாணவர் அணி ராம்குமார். நகர துணை செயலாளர்கள் சீனிவாசன். சசிகுமார்.

நகர மன்ற உறுப்பினர்கள் சண்முகவள்ளி பழனி. ரமேஷ். முகமதுஹனிபா. குலோத்துங்க சோழன். லாவண்யா முத்துவேல். அருள் நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலச்சந்தர். ராஜா. மதியழகன். கிரி. தகவல் தொழில் நுட்ப அணி மோகன் மற்றும் உட்கிளை செயலாளர்கள் வார்டு பொறுப்பாளர்கள் கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்ட னர்.

நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பார்த்திபன் நன்றியுரை யாற்றினார்.

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 27.05.2023 சனிக்கிழமை அன்று பகல் 12.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா,
2. அணியின் வளர்ச்சிப் பணிகள் - குறித்து.

**கு.கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குட்டப்பாளையம் மிசா கே.என்.சாமிநாதன்
### மே 24 (1986)



கொங்கு சீமையில் பாரம்பரியமிக்க செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்தவர் எனினும், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியபோது தன்னையும் அதில் இணைத்துக் கொண்டு, கழகச் செயல் வீரர்களுடன் கொங்கு மண்டலத்தின் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று, பாமரனும் புரியும்படி நகைச்சுவையாக பேசி கழக கொள்கைகளை பரப்பியவர்.

1967ல் வெள்ளகோவில் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார்.

பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, கால்நடை அபிவிருத்தி குழு உதவி தலைவராகவும் – தமிழ்நாடு தானிய சேமிப்பு கிடங்கு இயக்குநராகவும் – ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் – தாராபுரம் குளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பு ஆலை தலைமை பொறுப்பு போன்ற பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு கோவையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "கொங்கு நாட்டில் தலைதாழச் சிங்கமாக, தன்மான முரசாக தமிழ் இனத்துச் சுடரொளியாக வாழ்ந்த குட்டைப்பாளையத்தார்" என தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## காஞ்சிபுரம் சாலவாக்கத்தில் தெருமுனைக் கூட்டம்!

காஞ்சிபுரம், மே 24 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றியத்துக்குட்பட்ட ஒழையூர் மற்றும் சேந்தாங்குளம் ஊராட்சிகளில் இளைஞரணி சார்பில் நடைபெற்ற கழக அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் சாலவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர் டி. குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் அமுதா தமிழ்வேந்தன், முனுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய இளைஞரணி கே.வெங்கட்ராமன் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர் மங்களம் பிரபாகரன் ஆகியோர் பேசினர்.

இதில் எஸ்.ஆர்.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஜி.சிவராமன், இளைஞரணி துணை அமைப்பாளர் பெ.மணி, கார்த்திகேயன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் கோபி.சேகர் மற்றும் என்.எஸ்.இரவி, வி.பாலமுருகன், வி.பாண்டியன், செ.விஷ்ணு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஓராண்டுக்கு கொண்டாடுவோம்!

# சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, மே 24 -

சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் காரைக்குடியில் மாவட்ட அலுவலகமான தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டிணன் அரங்கத்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழகத்தில் ஐந்து முறை முதல்வராக இருந்து தமிழகத்தை நல்வழி பாதையில் நடத்திச் சென்று தமிழக மக்களின் பொருளாதார வாழ்வு , தமிழ் மொழி உணர்வு, தமிழ் மக்களின் நலன்களை பாதுகாத்தல் போன்று பல்வேறு எண்ணற்ற சாதனைகளைப் படைத்து நம்முடைய இதயத்தில் என்றும் குடியிருந்து வரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வருகிற ஜூன் மாதம் 3ம் தேதி வருகிறது. 3ம் தேதி முதல் ஒரு ஆண்டுகளுக்கு கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட உள்ளது.

இதனை தமிழக முதல்வரும், கழக தலைவருமான தளபதி அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஓராண்டு காலம் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் ஜூன் மூன்றாம் தேதி முதல் 2024 ஜூன் மூன்றாம் தேதி வரை ஓராண்டுக்கு மாவட்டங்கள் தொடங்கி கிராமங்கள் வரை சிறப்பாக கொண்டாட வேண்டும். அதற்கான ஏற்பாட்டினை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஊராட்சி கழக செயலாளர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

மேலும் கழகத்திற்கு புதிய உறுப்பினர் சேர்த்தல் பணியினை 4 சட்டமன்றத் தொகுதிகளில் தீவிரமாக சேர்த்திட வேண்டும். என்று தெரிவித்தார். மேலும் நாளை ( 25ஆம் தேதி) சிவகங்கை மாவட்டத்தில் தேவகோட்டை, காரைக்குடி, குன்றக்குடி, ஆகிய ஊர்களில் நடைபெறும் கழக பொறுப்பாளரின் இல்லத்திருமண விழாக்களில் பங்கேற்க வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இவ்வாறு அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், மாரியப்பன் கென்னடி, மாவட்ட துணை செயலாளர் கள் த. சேங்கை மாறன் கே.எஸ். எம்.மணிமுத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் த. இராமையா, எஸ். முத்துதுரை, அ.முகம்மது, பொதுக் குழு உறுப்பினர்கள் த.உதயகுமார், மதார்சேட் அம்பலமுத்து, தெய்வானை இளமாறன், பள்ளத்தூர் கே. எஸ்..ரவி, அம்பலமுத்து ஆதி.கண்ணாத்தாள், நகர கழக செயலாளர் கள் என். குணசேகரன் பெரி. பாலா, துரைஆனந்த்,. க.பொன்னுச் சாமி, ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னதுரை சின்னத்துரை,

கே ஆர். ஆனந்த், நாகனி ரவி, பூபால சிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன், திருமலை முத்துராமலிங் கம், எம். ஜெயராமன் துரை.ராஜாமணி எம்.அண்ணாதுரை, ஆறு.செல்வராசன், கா. வெங்கட்ராமன், வே. தமிழ்மாறன், ஆரோக்கிய சாமி யோக.கிருஷ்ண குமார், ந.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், எஸ்.சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், கே.பாலசுப்பிரமணியன், பூமணி,

செல்வ ராஜ் பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர். கார்த்திகேயன் , நாகூர் கனி, ஜெயராமன், கதிர்வேல், கே .பி. எஸ். பழனியப்பன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் நிர்வாகிகள் முத்துக்குமார் சிவபுரிசேகர் சொ.கண்ணன் சேவியர் உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி நகர செயலாளர் என். குணசேகரன் நன்றி கூறினார்.

**GREATER CHENNAI CORPORATION**
**SPECIAL PROJECT DEPARTMENT**

S.P.D.C.No.A1/0666-5/2023 **e-TENDER NOTICE**

e-Tenders are invited for the following works in Single Cover System as per details furnished below.

| Sl. No. | NIRBHAYA FUND - Development of Sports Training Grounds in GCC Schools |
|---|---|
| 1 | **S.P.D.C.No.A1/0666-5/2023 - Package V** - in Dn-128, Dn-133 & Dn-142, Zone-10, approximate value of work **Rs.106.87 lakhs** (Including GST) E.M.D. amount **Rs.1,07,000/-** |
| 2 | **S.P.D.C.No.A1/0666-6/2023 - Package VI** -in Dn-175 & Dn-182, Zone-13, approximate value of work **Rs.194.22 lakhs** (Including GST) E.M.D. amount **Rs.1,95,000/-** |

Tender last date and time of submission : upto **08.06.2023, 3.00 pm**
Bid document will be available in website : **https://tntenders.gov.in** upto **08.06.2023, 3.00 pm**
Tender opening date and time : **09.06.2023 at 3.00 p.m.**

DIPR / 2688 / Tender / 2023 சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் **Superintending Engineer /S.P**

வேலூர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க இரண்டாம்கட்ட தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!



வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| தேதி | நேரம் | ஒன்றிய /நகரம் / பகுதி / பேரூர் | ஊராட்சிகள் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 27/05/2023 | மாலை 5.00 | காட்பாடி தெற்கு பகுதி | தாராபடவேடு குளக்கரை பள்ளி அருகில் | பழராஜேந்திர பிரசாத் |
| 27/05/2023 | மாலை 5.00 | காட்பாடி வடக்கு பகுதி | ஓடைப் பிள்ளையார் கோயில் | பெரிய கோட்டீஸ்வரன் |
| 27/05/2023 | மாலை 5.00 | காந்திநகர் பகுதி | தனபாக்கியம் கிருஷ்ணசாமி மண்டபம் அருகில் | V.A.அன்பு |
| 27/05/2023 | மாலை 5.00 | சத்துவாச்சாரி தெற்கு பகுதி | ரங்காபுரம் | S.கதிரேசன் |
| 27/05/2023 | மாலை 5.00 | சத்துவாச்சாரி வடக்கு பகுதி | காந்திநகர் | சேர்காடுகென்னடி |
| 27/05/2023 | மாலை 5.00 | சைதாபேட்டை பகுதி | தோட்டபாளையம் புதுகுடியான் சத்திரம் | கழிஞ்சூர் கண்ணன் |
| 28/05/2023 | மாலை 5.00 | சலவன்பேட்டை பகுதி | ஓல்டுடவுன் | பிரம்மபுரம் பழனி |
| 28/05/2023 | மாலை 5.00 | வேலப்பாடி பகுதி | சார்பனாமேடு | குடியாத்தம் குமரன் |
| 28/05/2023 | மாலை 5.00 | சங்கரன்பாளையம் பகுதி | சின்னஅல்லாபுரம் | கழிஞ்சூர் கண்ணன் |
| 28/05/2023 | மாலை 5.00 | அல்லாபுரம் பகுதி | ஓட்டேரி | த.புவியரசி |
| 28/05/2023 | மாலை 5.00 | தொரப்பாடி பகுதி | முருகன் கோயில் | S.கதிரேசன் |
| 28/05/2023 | மாலை 5.00 | கஸ்பா பகுதி | 1வது பயர்லைன் | இராஜேந்திரபிரசாத் |
| 28/05/2023 | மாலை 5.00 | சேண்பாக்கம் பகுதி | சேண்பாக்கம் | பெரிய கோட்டீஸ்வரன் |

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
வேலூர் மாவட்ட தி.மு.க.